



இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.க. வெற்றி வேட்பாளர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி.அவர்கள் வாலாஜா தெற்கு ஒன்றியம் பாரதிநகர், பொன்னம்பட்டு, TNHB சிப்காட், ராஜுவ்காந்தி நகர், புளியந்தாங்கல், அம்பேத்கர் நகர், இந்திராநகர், மலைமேடு, வடகால் நரசிங்கபுரம், இந்திராநகர், சாமி நகர், வ.ஊ.சி.நகர், பெல் பேருந்து நிலையம் எதிரில், திரு.வி.க.நகர், சிப்காட் வ.ஊ.சி.நகர், அண்ணாநகர்,பெரியதாங்கல், மேட்டுதெங்கால், காமராஜ் நகர், அண்ணாநகர், தெங்கால்,அவரக்கரை அவரக்கரை ADC, கீழ் மணியம்பட்டு, மணியம்பட்டு,புளியங்கண்ணு மந்தவெளி, பகுதிகளில் கழக ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். இதில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிகட்சிகள்மாவட்ட செயலாளர் வி.சி.க. சீ.மா.ரமேஷ்கர்ணா ஒன்றிய செயலாளர் டி.சி.பத்மநாபன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஒன்றிய நிர்வாகிகள் கழகத்தினர் உடனிருந்தனர்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர்

# கு.பிச்சாண்டி கீழ்பென்னாத்தூர் தொகுதி முழுவதும் தீவிர பிரச்சாரம்!

## நெல்கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.3500 – கரும்பு டன்னுக்கு ரூ.4500 ஆகவும் தரஉறுதி!




கீழ்பென்னாத்தூர், ஏப். 14 -

கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் கு. பிச்சாண்டி அனல் பறக்க கீழ்பென்னாத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பொது மக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

முற்பகலில் அண்ணா நகர், எலந்தம்புரவடை, மேரி மாதா கோயில், ராஜாதோப்பு, கொட்டாவூர், அம்பேத்கர் நகர், பெரியார் தெரு, அண்ணா தெரு, திண்டிவனம் சாலை, நடுத்தெரு, பட்டித் தெரு, திருவண்ணாமலை சாலை, அந்தோணியார் சாலை உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து பிற்பகலில் கலைஞர் நகர், அரசு மருத்துவமனை, காந்தி தெரு, பட்டி தெரு, அவலூர்பேட்டை ரோடு, சந்தை மேடு, நெடுங்காபூண்டி, மேட்டுப்பாளையம், காசிநகர், கருங்காலிக்குப்பம் உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களை சந்தித்து ஆதரவு கோரினார்.

பிரச்சாரத்தின் போது அவர் பேசுகையில், கடந்த ஐந்தாண்டு காலத்தில் திமுக அரசின் ஆட்சியில் தனது தொகுதியில் பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார். குறிப்பாக, தி. வலசை - சு. வாழவெட்டி இடையே துணிந்தில் ஆற்றின் குறுக்கே ரூ.6.70 கோடி மதிப்பில் உயர்மட்ட மேம்பாலம் கட்டப்பட்டது என்றும், சூபோலக்கணம் ஊராட்சியில் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.2.60 கோடி மதிப்பில் 8 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டதாகவும் கூறினார்.

அதேபோல், நாயுடுமங்கலம் பகுதியில் ரூ.4.50 கோடி மதிப்பில் ஒழுங்கு முறை விற்பனை கூடம், கீழ்பென்னாத்தூர் பேரூராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.3.51 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலையம், ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் ரூ.4.50 கோடி மதிப்பில் அமைத்தல், கருங்காலிக்குப்பம் பகுதியில் ரூ.45 லட்சம் மதிப்பில் புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் அமைத்தல் போன்ற பணிகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் சிறு கொத்தன் கிராமத்தில் 2500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ரூ.4.50 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், கீழ்பென்னாத்தூர் பேரூராட்சியில் சிறுவர் விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் நிறைவேற்ற ப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

தொடர்ந்து, வரும் ஆட்சிக்காலத்தில் மக்கள் நலனை முன்னிறுத்தி பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார். கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 10 லட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டி வழங்கப்படும் என்றும், கிராமப்புற சாலைகளுக்கு ரூ.10,000 கோடி ஒதுக்கீட்டில் மேம்பாடு செய்யப்படும் என்றும் கூறினார்.

விவசாயிகளுக்கு மீட்டர் இல்லாத நவீன மின்சார பம்பு செட்டுகள் வழங்கப்படும் என்றும், நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு 3500 ஆகவும், கரும்பு டன் ஒன்றுக்கு 4500 ஆகவும் உயர்த்தப்படும் என்றும் தெரிவித்தார். “உங்களுடன் ஸ்டாலின்”, “நலம் காக்கும் ஸ்டாலின்” முகாம்கள் மூலம் அரசு சேவைகள் நேரடியாக மக்களை சென்றடையும் என்றும் கூறினார்.

மேலும், இல்லத்தரசி திட்டத்தின் கீழ் 8000 மதிப்புள்ள கூப்பன் வழங்கப்படும் என்றும், ஆண்டு வருமானம் 5 லட்சம் வரை உள்ள குடும்பங்களுக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் 10 லட்சம் வரை காப்பீட்டு சிகிச்சை வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

“தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ள அனைத்து வாக்குறுதிகளையும் இத்தொகுதியில் முழுமையாக நிறைவேற்றுவதற்கு பாடுபடுவேன். ஆகையால், என்னை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்” என பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த பிரச்சாரத்தில் பேரூர் செயலாளர் சி.கே. அன்பு, பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பன்னீர் செல்வம், எம். சுந்தரமூர்த்தி, ஜி. குமார், கோ. சரவணன், எஸ். பழனி, எஸ். இளங்கோ, டி. வெங்கடேசன் (பாபு), கே. ராஜேஷ், எஸ். வினோத் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

மேலும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள், இளைஞர் அணி, மகளிர் அணி உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் உற்சாகமாக வேட்பாளரை வரவேற்று, பெண்கள் ஆரத்தி எடுத்தும், மாலை அணிவித்தும், சால்வை அணிவித்தும் ஆதரவு தெரிவித்தனர். “உதயசூரியன் வெற்றி பெற வேண்டும்” என கோஷங்கள் எழுப்பி உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.



விழுப்புரம் மத்திய மாவட்டம், கண்டமங்கலம் மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட 10 ஊராட்சிகளில் உள்ள 300 க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகளிடமும், கூட்டணிக் கட்சி தோழர்களிடமும், ஒருங்கிணைந்து செயல்பட்டு வெற்றி பெற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் அனைத்து கழக நிர்வாகிகளுக்கும் தலைமை கழகம் சார்பாக தொகுதிப் பொறுப்பாளர் இரா.வெங்கடேசன் சிறப்புரை ஆற்றினார். இந்த கூட்டத்தை ஒன்றியச் செயலாளர் சீனு செல்வரங்கம் ஏற்பாடு செய்திருந்தார்.

# அண்ணலின் எண்ணப்படி, இன்னல் துடைத்த, தலைவர், தளபதி!



“ அடிநாள் தொட்டு
அடிமைகளாய், தொழும்பர்களாய்
ஆதிக்கக்காரர்களின் சவாரிக் குதிரைகளாய்,
தாழ்த்தப்பட்டோர் தணல்மீது மெழுகென
தவிதவித்த நிலை மாற்றிட கீழ்வானில்
தகத்தகாய சூரியனாய் உதித்தான் ஒருவன்.

அந்த தலைசார்ந்த அறிஞனுக்குப் பெயர் தான் அம்பேத்கர்.

என்று தலைவர் கலைஞர் அவர்களால் புகழாரம் சூட்டப்பட்ட சட்டமேதை, பாபா சாஹேப் அம்பேத்கர் அவர்கள் தோன்றிய தினம் இன்று (14.4.2026).

தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியிலும், தளபதியவர்களின் திராவிட மாடல் ஆட்சியிலும் தீட்டப்பட்ட திட்டங்கள், செய்யப்பட்ட பணிகள், நிறைவேற்றப்பட்ட தொலைநோக்கு திட்டங்கள் இவற்றை உற்று நோக்கினால், எல்லா சமூகங்களும் நன்மையடைந்துள்ளன.

குறிப்பாக ஆதிதிராவிட சமுதாயம் பல சமூக மாற்றங்களையும், ஏற்றங்களையும் பெற்றுள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி அண்ணல் அம்பேத்கர் மிகப் பெரிய சமூக மாற்றத்திற்கு அடிப்படையானது எதுவென திட்டமிட்டாரோ, அவற்றைச் சட்டமாக்கிய முதலமைச்சர்கள் நமது கண்ணான தலைவர்கலைஞரும்,திராவிடபேரரசர்தளபதியவர்களும்.

அம்பேத்கர் தோன்றிய காலகட்டத்தில் வர்ணாசிரமத்தின் வஞ்சனையால், சாதிக் கொடுமைகள் தலைவிரித்தாடியது.

“ மாடு தின்னும் புலையா,
உனக்கு மார்கழித் திருநாளா? “

எனத் தாழ்த்தப்பட்ட சமுதாயம் கேவலப்ப டுத்தப்படவில்லையா? மேட்டுக் குடியினர் தெருவில் நடவாதே! செருப்பு அணியாதே, கோவிலுக்குள் நுழையாதே, பார்ப்பதே பாவம்! தொடுவதே தீட்டு எனப் புறக்கணிக்கப்படவில்லையா?

இந்த இழிநிலை அகன்றிட அம்பேத்கர் அயராது பாடுபட்டார்.

சட்டத்தில் சலுகை, மாற்றம் என சில வட்டத்தில் வர்கபேதம் குறைந்ததேயன்றி, நீருபூத்த நெருப்பாய் ஜாதிக் கொடுமைகள் கனன்று கொண்டேதான் இருந்தது.

அன்றைய நாளில் ஆதிதிராவிடர்களுக்கு மட்டு மின்றி, அகிம்சா மூர்த்தி அண்ணல் காந்தியடிகளுக்கும் வர்கபேத வஞ்சனையே காட்டப்பட்டது.

நூறாண்டுகளுக்கு முன்பு 16.9.1927 அன்று தஞ்சையில் நீதிக்கட்சியைச் சார்ந்த ஏ. டி. பன்னீர் செல்வம், உமாமகேஸ்வரம்பிள்ளை, மற்றும் உக்கடைதேவர், சையத் தாஜுதீன், பட்டுக்கோட்டை தண்டபாணி செட்டியார் உள்ளிட்டோர் தமிழ்நாட்டிற்கு வந்திருந்த அண்ணல் காந்தியை சென்று சந்தித்தனர்.

பிராமணர் பிராமணரல்லாதோர் பிரச் சினை பற்றி பேச்சு வந்த போது காந்தியார்,

“ தென்னாட்டில் பிராமணர் பிராமணரல்லாதோர் பிரச்சினை அதிகம் இருக்கிறதென்றும், இதில் நான் தலையிட்டு மனநிறைவு தரக்கூடிய ஒரு முடிவை ஏற்படுத்த வேண்டுமென ஈரோடு இராமசாமி நாயக்கர் கூறுகிறார்.

ஆனால் பிராமணர்களிடம் தற்போது முற்போக்கான கொள்கைகள் பரவி வருவதைக் காண்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன் நான் சென்னைக்கு வந்த போது எஸ் ஸ்ரீனிவாச அய்யங்கார் வீட்டின் தாழ்வாரத்தில் தான் உட்கார்ந்தேன். இப்போது அவர் வீட்டை என் வீடாகவே நினைத்துப் பழகிவருகிறேன். என் மனைவி அவர்கள் அடுப்பங்கரை வரை செல்கிறாள் “ என்று சொல்லியிருக்கிறார்.



வழக்கறிஞர்
வெ.அன்புவாணன்
கொள்கை பரப்பு
துணைச் செயலாளர்

இந்தச் செய்தி, அன்றைய “ சுதேசமித்திரன் “ இதழில் விவரமாக வெளியாயிருக்கிறது. (ஆதாரம் 1. நீதிக்கட்சி 75 ம் ஆண்டு விழா மலர். 2.விடுதலைப் போரும், திராவிட இயக்கமும் உண்மை வரலாறு. திராவிடர் கழக வெளியீடு)

இப்படி தேசத்தந்தையான மகாத்மாகாந்தியே ஜாதிதுவேசத்திற்கு ஆளாக்கப்பட்ட காலத்தில் தாழ்த்தப்பட்டோரின் நிலை எவ்வாறு இருந்திருக்கும் என நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இதனால்தானே தென்னகத்தில் தந்தைப் பெரியாரும், வடநாட்டில் அண்ணல் அம்பேத்கரும் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்கும், விடுதலைக்கும் புயலாய்ச்சீறி, பூகம்பமாய் குலுங்கி, புரட்சிகள் செய்தனர்.

இவர்களின் தாக்கத்தால் தான் தலைமுறை, தலைமுறையாக எந்த சமுதாயம் கைக்கட்டி, வாய்ப்பொத்தி, கேள்விக்குறிபோல் முதுகுவளைந்து மேட்டுக்குடியினர் முன் “ சாமிகளே......! “ என்று நின்றதோ, அதே தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த ஜோலார்பேட்டை வரதராஜன் அவர்களை உயர் நீதிமன்ற நீதிபதியாக்கி, அவரை எல்லா சமூகத்தினரும், “ MY LORD என்றழைக்கின்ற புரட்சியை நமது தலைவர் கலைஞர் அவர்களன்றோ நிகழ்த்திக் காட்டினார்.

பின்னாளில் அவரே தாழ்த்தப்பட்ட சமூகத்தின் முதல் உச்ச நீதிமன்ற நீதிபதியுமானார்.

எட்டுபேர் அடங்கிய அமைச்சரவையில் முதல் தலித் பெண்மணியான திருமதி சத்தியவாணி முத்து அவர்களை அமைச்சராக்கிக் காட்டியது அறிவுலக மேதை நமது அண்ணாவன்றோ!

இது கணிப்பொறி யுகம். சென்ற இருபதாம் நூற்றாண்டில் புதுப்புது கண்டுபிடிப்புகள், வசதிகள், வான்வெளிக்கு மனிதன் சென்ற அதிசயம் நடந்தேறியது.

தகவல் தொடர்பு பலப்பட்டது. தந்தியில்லா முறை மூலம் மக்கள் கண்டம் விட்டு, கண்டம் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களிடம் நொடியில் பேசக்கூடிய வசதி, வாய்ப்புகள் பெருகின.

ஆனால் அதே நேரத்தில் இந்தியாவில் பழைய நிலை மாற்றப்படாமல் தான் இருந்தது. வான்நோக்கி வளர்ந்த பங்களாக்களும் இருந்தன. பாழும் மனிதன் வாழ வழியின்றி, இருக்க இடமின்றி, இன்னலுற்ற இழிநிலையும் இருந்தது.

“ அண்ணார்ந்து பார்க்கின்ற மாளிகைக்கட்டி,
அதன் அருகினில் ஓலை குடிசை கட்டி,
பொன்னான உலகென்று பெயருமிட்டால்,
இந்த பூமி சிரிக்கும்! அந்த சாமி சிரிக்கும்! “ என்றொரு திரைப்பட பாடலுண்டு.

அதைப்போல எவ்வளவோ முன்னேற்றம் கண்ட இந்நிலையிலும், சாக்கடையிலும், சாணத்தின் முடை நாற்றத்திலும் சாலை ஓரத்தில் வேலையற்று, இருக்க இடமின்றி தாழ்த்தப்பட்டோர் அவதியுற்றனர்.

கிறிஸ்தவ வேத நூலான பைபிளில்,

“ நரிகளுக்கு குழிகளும், ஆகாயத்துப் பறவை களுக்கு கூடுகளும் உண்டு. மனுச குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை. என்றொரு வாக்கியம் உண்டு.

இதைப்போல சாலையோரங்களில் கால்நடை களுடன் கால்நடைகளாய் பொழுதைக் கழித்த தாழ்த்தப்பட்டோரின் மனம் குளிரும் வண்ணம் அதே சாலை ஓரங்களில் கோபுரம் போல் கட்டப்பட்ட அடுக்கு மாடி குடியிருப்புகளில் தலைவர் கலைஞர் அவர்கள் குடிசை மாற்று வாரியம் கொண்டு வந்து குடிய மர்த்தினார்.

மாளிகையின் உப்பரிகைகளின் மேலிருந்து மன்னவர்கள் ரசித்ததைப் போல் அல்லவா தாழ்த்தப்பட்டோர் களித்துத் திளைத்தனர்.

நடமாடும் மனிததெய்வம் என வணங்கப்பட்ட கருணை வடிவம், அன்பின் சொரூபம், அன்னை தெரேசா சேவைபுரிந்த கல்கத்தா வீதிகளில் மனிதனை வைத்து மனிதன் இழுத்த கொடுமை இருந்தபடிதான் இருந்தது.

ஆனால்,

சென்னையில் கைரிக்ஷா முறை நமது முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால், ஐம்பதாண்டுகளுக்கு முன்பே அகற்றப்பட்டதே, கைரிக்ஷா இழுத்தோ ரெல்லாம் இராமநாதபுரம் ராஜா வீட்டுப் பிள்ளைகளா? செட்டி நாட்டு குட்டிக்குபேர்களா? 80 சதவீதம் எமது தாழ்த்தப்பட்ட இனத்தவர்தானே!

எவர் தீர்க்க முற்பட்டார் இந்த இழிநிலையை இந்தியாவில் நமது தலைவர் கலைஞரையன்றி?

சாதி ஒழிய கலப்பு மணம் ஒன்றே சிறந்த வழியென்றார் அம்பேத்கர். அதற்காக கடும் போராட்டங்களையும் முன்னெடுத்தார்.

அந்த கலப்பு மணங்களை ஆதரித்ததோடு, சட்ட அங்கீகாரம் தந்த அண்ணாவின் வழியில் அவற்றை உறுதி படுத்த, பெருமைபடுத்த அஞ்சுகத்தம்மையார் பெயரில் திட்டமேற்படுத்தி, ரூபாய் இருபதாயிரம் வழங்கி, இந்தியாவில் தோன்றிய எந்த சீர்திருத்த வாதியும் செய்ய முன்வராத கலப்புத் திரு மணங்களை தனது இல்லத்து வழித்தோன்றல்களுக்கு செய்து வைப்பதில் வேறெந்த தலைவரை விடவும் நமது தலைவர் கலைஞர் முன்நிற்கிறார்.

தேசிய கவி ராமலிங்கம் பிள்ளை அவர்கள், 100 ஆண்டுகளுக்கு முன்னர்,

“ ஆனி, ஆடிமாதக் கொந்தளிலே
மந்தை ஆடுகள் போல் நடுங்கிடுவோம்!
வேனில் வெந்துடல் வேர்த்திடவே,
வெயில் வேளையில் அலைந்து, திரிந்திடுவோம்!
சுற்றிய கந்தை ஒரு முழமாம்
அதில் தோன்றிடும் கீரலும் ஆயிரமாம்!
பற்றும் அழுக்கினை போக்குமென்றால்
ஆடை, பஞ்சு, பஞ்சாய் பறக்குதம்மா! “

என ஏழைகள் படும் துயரை மிகுந்த வலிகளோடு எழுதினார்.

இன்று அப்படியெல்லாம் இந்த ஆட்சியில் யாரும் இல்லை.

விளிம்பு நிலை மக்களின் வேட்கையறிந்து, யாரும் கேட்காமலே திட்டங்களை தீட்டியவர் நமது திராவிடப் பேரரசர் தளபதியவர்கள்.

ஆதரவற்ற, வீடற்ற அப்பாவி மக்களுக்கு, மின்விசிறி, அலமாரி இவற்றுடன் அலைபாயும் கடலோரம் ஆதரவற்றோர் இல்லங்கள்!

காலம், காலமாய் அடிப்படை கல்விகூட மறுக்கப்பட்ட நால்வகை வர்ணம் என்று வகுத்தபோதுகூட அந்த வர்ணங்களில்சேராத பஞ்சமர் எனப் பிரித்துப் பார்க்கப்பட்ட எங்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த வழக்கறிஞர் கோவி. செழியனை உயர் கல்வித்துறை அமைச்சராக்கி, (அவரே, அண்மையில் உணர்வு மேலிட உரைத்தது தான்). பல பல்கலைக்கழகங்களை வழிநடத்தும் தகைசால் உயர்வினைத் தந்தவர் திராவிட மாடல் முதலமைச்சர் தளபதியவர்கள்!

அண்ணாவும், கலைஞரும், ஐயா பெரியாரும் இன்றிருந்தால், பூரித்து, புளகாங்கிதம் அடைந்து நமது திராவிடப் பேரரசரை உச்சி முகந்து, முத்தமிட்டுப் பாராட்டியிருப்பர்.

தளபதியவர்களின் எந்த திட்டத்தை உற்று நோக்கினாலும், அதில் பெம்பான்மையளவு தாழ்த்தப்பட்ட, விளிம்பு நிலை மக்களின் உயர்வினை முன்னெடுத்தே, வகுக்கப்படுகிறது என்பதை எங்கள் தாழ்த்தப்பட்ட சமூகம் உணர்ந்துள்ளது.

இந்த தேர்தல் பரப்புரைகளில், வீட்டுக்கு வீடு வாக்குச் சேகரிப்பில் அது மக்களின் ஆரவார, எழுச்சியான வரவேற்பில் தெரிகிறது.

இன்னும் சரியாக இருபது நாட்கள்.
மே மாதம் 4 ந்தேதி
எல்லோருக்குமான முதலமைச்சர்!
இவர் எங்களுக்கான முதலமைச்சர்

என எல்லா அடித்தட்டு, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, விளிம்புநிலை மக்களின் விடியல் முதலமைச்சர் எங்கள் திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்கள் என்று எக்காளமிட்டு, வாழ்த்தொலி முழங்குவோம்!

வாழ்க அண்ணலின் பெரும்புகழ்!
தொடரட்டும் திராவிட மாடல் அரசு!!